

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள முத்துசாமி பிரதர்ஸ் இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் புதிய கிளை அச்சகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்து பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பித்த நபர்களுக்கு அரசிதழில் வெளியிடப்பட்டதற்கான ஆணையினை வழங்கினர். இதில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் வெ.ஷோபனா, மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், .மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், துணை பணி மேலாளர் ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம், மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 12 புதிய பேருந்து வழித்தட சேவைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, பொது மேலாளர் (கு.அ.போ.க.) கே.முகமதுநாசர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டத்தில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு

# 203 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஏப்.15-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு 203 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகைகள், வங்கி கடனுதவிகள், திருமண உதவித்தொகை திட்டம், போட்டித் தேர்வுகளுக்கு சிறப்பு பயிற்சிகள், காதொலி கருவிகள், திறன் பேசிகள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா மற்றும் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, 203 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி னார்.

அதன்படி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 104 பயனாளிகளுக்கு ரூ.1,05,87,200 மதிப்பில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், 04 பயனாளிகளுக்கு ரூ.64,796 மதிப்பில் வாய் பேசாத மற்றும் காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் பார்வையற்றோர் மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் பேசிகளும், 04 பயனாளிகளுக்கு ரூ.35,600 மதிப்பில் சிறப்பு சக்கர நாற்காலிகளும், 08 பயனாளிகளுக்கு ரூ.1,26,000 மதிப்பில் சக்கர நாற்காலிகளும், 05 பயனாளிகளுக்கு ரூ.57,225 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள்களும், 03 பயனாளிகளுக்கு ரூ.1,650 மதிப்பில் எல்போ ஊன்றுகோலும், 01 பயனாளிக்கு ரூ.898 மதிப்பில் ஆக்சிலரி ஊன்றுகோலும், 05 பயனாளிகளுக்கு ரூ.8,780 மதிப்பில் பிரெய்லி கடிகாரங்களும். 02 பயனாளிகளுக்கு ரூ.606 மதிப்பில் கருப்பு கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோலும், 05 பயனாளிகளுக்கு ரூ.16,425 மதிப்பில் காதொலி கருவிகளும், 14 பயனாளிகளுக்கு ரூ.9,28,480 மதிப்பில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் தங்க நாணயங்களும், 01 பயனாளிகளுக்கு ரூ.2,00,000 மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய விபத்து நிவாரணம் நிதி உதவித்தொகையும், 19 பயனாளிகளுக்கு ரூ.3,23,000 மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய இயற்கை மரண ஈமச்சடங்கு நிதி உதவித்தொகையும், 28 பயனாளிகளுக்கு ரூ.85,000 மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய கல்வி உதவித்தொகைகளும் என மொத்தம் 203 பயனாளிகளுக்கு ரூ.1,24,35,660 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் கிடைக்கப்பெற்று பயனடைந்துள்ள மாற்றுத்திறன் பயனாளி மாலதி என்பவர் தெரிவிக்கையில், நான் சுள்ளங்குடி ஊராட்சியில் எனது கணவருடன் வசித்து வருகிறேன். எனக்கு தமிழ்நாடு அரசின் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்க நாணயமும், காசோலையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார சூழலை உணர்ந்து இத்தகைய திட்டங்களின் மூலம் நலத்திட்டங்களை வழங்கி வரும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என மாலதி தெரிவித்தார்.

இதேபோன்று அரியலூர் மாவட்டம், சுத்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வீரமணி என்பவர் தெரிவிக்கையில், இன்றைய தினம் எனக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். ஒரு கால் செயல்படாத நிலையில் உள்ளதால் நான் சொந்த வேலைகளுக்கு வெளியில் செல்லும் போது மிகவும் சிரமமாக இருக்கும். இந்நிலையில் எனக்கு ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது எனக்கு மிகுந்த தன்னம்பிக்கையினை அளித்துள்ளது. இத்தகைய உதவியினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வீரமணி என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மஞ்சுளா,

ஜெயங்கொண்டம் நகர் மன்ற தலைவர் சுமதி சிவக்குமார்,

ஜெயங்கொண்டம் நகர் மன்ற துணைத்தலைவர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக செயல்திறன் உதவியாளர் செல்வகுமார்,ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. மணிமாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன்,

மற்றும் அரசு அலுவலர்கள், மாற்றுத்திறனாளி பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தர்மபுரி கிழக்கு மாவட்ட மாணவரணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் தலைமையில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கலந்து கொண்டு இல்லம்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார்.உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன்,மாநில நிர்வாகி ஆர்.பி.செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் சி. செல்வராஜ்,ஆறுமுகம்,ஒன்றிய கழக செயலாளர்கள் ஏ.கருணாநிதி,ஏ.எஸ்.சண்முகம், வைகுந்தம்,மல்லமுத்து,மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அன்பரசு,முன்னாள் மாவட்ட ஊரட்சி குழு உறுப்பினர் கந்தசாமி,துணை அமைப்பாளர்கள் கே.ஆர்.சி.செல்வராஜ், சூர்யா,இளங்கவி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



ஆதிக்கத்தை வென்றெடுத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை எந்த காரணமுமின்றி கிடப்பில் போட்ட ஆளுநருக்கு எதிராக சட்டப்போராட்டம் நடத்தி சட்டமன்ற மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயம் செய்து பெறப்பட்ட தீர்ப்பினை கொண்டாடும் விதமாக சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினார். இதில் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் விபத்தில் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.15–

திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் விபத்தில் மறைவுற்றதையடுத்து, இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க இளம் எழுத்தாளர், சமூகநீதி தொடர்பான கட்டுரைகளை ஆய்வு பூர்வமாக முரசொலியில் தொடர்ந்து எழுதி வந்த தோழர் சு.விஜயபாஸ்கர் (வயது 40) நேற்று சென்னையில் விபத்தில் காலமானார் என்ற செய்தி அறிந்து பெரிதும் அதிர்ச்சியுற்றோம்.

ஜாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட கொள்கையாளர்; சிங்கப்பூரிலும் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தில் துடிப்புடன் செயல்பட்டவர். EWSஉயர் ஜாதியினருக்கான பொருளாதார இடஒதுக்கீடு குறித்த அவரது தொகுப்பு நூல் மிக முக்கிய மானதாகும்.

இளம் வயதில் இத்தகையோரை இழப்பது திராவிடர் இயக்கத்திற்கும், சமூகநீதி உணர்வாளர்களுக்கும் பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தி னர் அனைவரும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என இயக்கம் சார்ந்தோராவர். இவரது மறைவுச் செய்தி அறிந்து கழகத்தினர் அன்னாரது இல்லம் சென்று மலரஞ்சலி செலுத்தினர்.

### சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில்

# 90,390 பயனாளிகளுக்கு ரூ.13.91 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் மரவனேரியில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேரில் ஆய்வு செய்து தகவல்!

சேலம், ஏப்.15-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், மரவனேரியில் புதியதாகக் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை 13.04.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 76,929 மாணாக்கர்களுக்கு ரூ.6.74 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையும், இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 13,333 மாணாக்கர்களுக்கு ரூ.6.31 கோடி மதிப்பிலான மிதிவண்டி களும், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 128 பயனாளிகளுக்கு ரூ.8.56 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 90,390 பயனாளிகளுக்கு ரூ.13.91 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், அரசு ஆதிதிராவிடர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் விடுதிகளில் ரூ.88.85 இலட்சம் மதிப்பிலான 90 பணிகளும், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் ரூ. 11.76 கோடி மதிப்பீட்டிலான 75 பணிகளும் கடந்த 4 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளைப் பராமரிப்பதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அந்த வகையில், சேலம் தாட்கோ மூலமாக மரவனேரியில் ரூ.7.66 கோடி மதிப்பீட்டில் 180 கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியில் இன்றையதினம் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மரவனேரியில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியானது தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் மொத்தம் 31 அறைகள் வீதம் ஒவ்வொரு அறையிலும் 6 மாணவர்கள் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒவ்வொரு அறையிலும் நவீன குளியலறை மற்றும் கழிவறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விடுதியில் உள்விளையாட்டு அரங்கம், நூலகம், சமையலறை, உணவருந்தும் அறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவாகவும், உரிய கால அளவிலும் முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன், சேலம் வருவாய் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்பு டைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த.க. பாலசுந்தரம்

ஏப்ரல் 15 (2008)



தி.மு.கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

வாலாசா நகர துணைச் செயலாளராகவும் பின்னர் 26 ஆண்டுகள் தொடர்ந்து நகரச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழக பொதுக்குழு உறுப்பினராவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக 1962ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூர் சிறையில் 70 நாட்கள் பேரறிஞர் அண்ணாவுடன் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.